[2003 ஏப்ரல் 11

256—

மலிவு விலையில் சாப்பாடு

***8707—திரு. சி. சிவசாமி :** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டல்களில் மலிவு விலையில் தரமான சாப்பாடு வழங்கும் புதிய திட்டம் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஹோட்டல்களில் மலிவு விலையில் தரமான சாப்பாடு வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்து உணவு விடுதிகளிலும் ஒரு சாப்பாடு *15* ரூபாய், *18* ரூபாய், *20* ரூபாய், *25* ரூபாய், *50* ரூபாய் வரை வழங்கப்படுகிறது. எனவே வேலைக்குச் செல்கின்ற ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் கருதி, அனைத்து உணவு விடுதிகளிலும் ஒரு சாப்பாட்டிற்கு—ஒரு பொரியல், ஒரு ஊறுகாய், ஒரு அப்பளம், சாம்பார், ரசம், சாப்பாடு உட்பட, குறிப்பிட்ட எடை அளவுள்ள சாப்பாட்டை, *10* ரூபாய் அல்லது அதற்கும் குறைவான விலையில் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கோவில்களில் பக்தர்களுக்கு அன்னதானம் தந்த அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஏழை விவசாயிகளுக்காக மதிய உணவு தந்த ஆட்சியில், பள்ளிக் குழந்தைகளுக்காக சத்துணவு தந்த ஆட்சியில், ஏழைத் தொழிலாளர்களுக்காக அனைத்து உணவு விடுதிகளிலும் 10 ரூபாய்க்கு உட்பட்ட, குறைந்த விலையில், உணவு வழங்க, மலிவு விலையில்

2003 ஏப்ரல் 11]

உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதிகளில் உணவுப் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்த, விலைக் கட்டுப்பாடு ஆணையம் போன்ற அமைப்பு ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கம், உணவுப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்படும் செலவிற்கேற்ப, விலையில் மாற்றங்கள் செய்து வருகின்றது. என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரிசிக்கு விதித்திட்ட வரியினைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே, ஹோட்டல்களில் ரூபாய் 50 இலட்சம் வரை turn-over செய்யப்படுகிறபோது, வரியே இல்லையென்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், நம்முடைய உறுப்பினர் சொல்லியதற்கிணங்க, என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 257, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

257—

குடிநீர்

***10436—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?